த.வெ.க. அரசில் ஜோதிடரைத் தொடர்ந்து

தேர்தல் வியூக நிபுணர்கள் ஆலோசகர்களாக நியமனம்!

மீண்டும் சர்ச்சையில் சிக்கிய முதல்வர்!

சென்னை, மே 24 -

த.வெ.க. அரசு தேர்தல் வியூக நிபுணர் ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டியை முதல்வர் விஜய்யின் ஆலோசகர்களாக நியமித்துள்ளது. ஏற்கனவே ஜோதிடர் நியமன சர்ச்சை வெடித்த நிலையில் புதிய ஆலோசகர் நியமனம் அரசியல் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் முதல்வர் விஜய்யின் ஆலோசகர் நியமனங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகிறது. தேர்தல் வியூக நிபுணர்களாக அறியப்படும் ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் முதல்வரின் ஆலோசகர் களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது அரசியல் வட்டாரங்களில் விவாதத்தை கிளப்பி யுள்ளது. ஏற்கனவே முதல்வர் விஜய்யின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக பிரபல ஜோதிடர் ரிக்கி ரத்தன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப் பட்டதாக கடந்த மே 12ம் தேதி தகவல் வெளியானது.

தமிழக அரசு இதற்கான உத்தரவை பிறப்பித்த நிலையில், ஜோதிடருக்கு அரசு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக கடுமையாக எதிர்ப்பு கிளம்பியது. சமூக வலைதளங்களிலும் இந்த நியமனம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. தொடர்ந்து எழுந்த விமர்சனங்களுக்கு பின்னர் அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

இந்த சர்ச்சை அடங்காத சூழலிலேயே தற்போது புதிய ஆலோசகர் நியமனம் குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன. அதன்படி, த.வெ.க. அரசின் தேர்தல் ஆலோசக ராகவும், அரசியல் வியூக வகுப்பாளராகவும் செயல்பட்ட ஜான் ஆரோக்கியசாமி, முதல்வர் விஜய்யின் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல் நிர்வாகம், கொள்கை மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகராக விஷ்ணு ரெட்டி நியமிக்கப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளன. தேர்தல் வியூக நிபுணர்களுக்கு தமிழக அரசு அமைப்பில் அதிகாரப்பூர்வ பங்கு வழங்கப்படுவது எந்த அளவிற்கு நியாயம் என்ற விவாதம் சமூக வலைதளங்களில் தீவிரமடைந்துள்ளது.

கோவையில் 10 வயது சிறுமி கடத்தி கொடூரக் கொலை!

புதிய அரசு பொறுப்பேற்ற 12 நாளில் 30 பெரிய குற்றங்கள் நிகழ்வு!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அதிர்ச்சி அறிக்கை!

சென்னை, மே 24 -

“கோவையில் 10 வயது சிறுமி கடத்திக் கொடூரக் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்த மிருகத் தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் த.வெ.க. அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கோவையில் 10 வயது

சிறுமி, கடத்தி கொலை செய்யப் பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச் சியையும், வேதனையையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்தக் கொலைச் சம்பவத்துக்கு உண்மையான நீதி வேண்டும் என்ற குரல், எல்லாப் பக்கமும் ஒலிக்கிறது.

இந்தியா முழுவதும் அதிர் வலைகளை ஏற்படுத்தி இருக்கிற இந்தக் கொடூரச் சம்ப வத்தைக் கண்டித்து, கோவை மக்கள் விடிய விடிய போராட்டம் நடத்துகிறார்கள். இந்த மிருகத் தனமான செயலைச் செய்த உண்மைக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும்.

சிறுமியின் பெற்றோருக்கு கழகம் துணையாக நிற்கும்!

இந்த இக்கட்டான நேரத்தில், சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, கழகம் அவர்களுக்குத் துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அரசு பொறுப்பேற்றதி லிருந்து, 12 நாட்களில் பாலியல் வன்கொடுமை, கஞ்சா கடத்தல், ரவுடிகள் தாக்குதல், ஆளுங் கட்சியினரின் அத்துமீறிய அராஜகம், தற்போது கோவை சிறுமி கடத்தி கொலை உள் ளிட்ட 30க்கும் மேற்பட்ட பெரிய நிகழ்வுகள் செய்திகளாக வந்து கொண்டே இருப்பது, மாநிலத் தின் சட்டம் ஒழுங்கை கேள்விக் குறியாக்கி உள்ளது.

இனி ஒரு சம்பவம் இதுபோல் நடக்காமல் இருக்க சட்டம் ஒழுங்கிற்கு முதல் முக்கியத்து வத்தை முதல்வர் தர வேண் டும் என தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

சிறுமி படுகொலை:

முதல்வர் பொறுப்பேற்க வேண்டும்! பெற்றோர் வலியுறுத்தல்!

கோவை, மே 24 –

இந்தியா முழுவதும் அதிர்வலை களை ஏற்படுத்தி இருக்கும் கோவை சிறுமியின் படுகொலைக்கு முதல மைச்சர் விஜய் பொறுப்பேற்க வேண் டும் என சிறுமியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். காவல்துறையி னர் முன்னுக்குப்பின் முரணான தக வல்களை தந்ததாகவும், சிறுமியின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர்.

கோவை அருகே, வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்த சிறுமிக்கு சாக்லேட் வாங்கித் தருவதாகக்கூறி அழைத்துச்சென்று பாலியல் வன்கொ டுமை செய்து படுகொலை செய்யப் பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த கொடூர சம்பவதற்கு முதல மைச்சர் விஜய் இதுவரை ஆறுதல் கூட தெரிவிக்கவில்லை. இந்த படு கொலைக்கு முதலமைச்சர் விஜய் பொறுப்பேற்க வேண்டும் என சிறுமி யின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ள னர். விஜய் ஆட்சியில் நிகழும் குற்றச் சம்பவங்கள் மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சிறுமியின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காவல்துறையினர் முன்னுக்குப்பின் முரணான தகவல் களை தந்ததாகவும், தங்களது குழந்தை உயிரோடு இருப்பதாக காவல்துறையினர் முதலில் கூறினர்; பின்னர் இறந்துவிட்டதாக கூறினர் என்று குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர்.

சமூக ஆர்வலர் என்ற போர்வையில்

த.வெ.க. கட்சியினர் டாஸ்மாக் ஊழியர்களை மிரட்டல்!

காவல்துறை துணை போவதாக டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம்!

திருவள்ளூர், மே 24, திருவள்ளூர் ஒருங்கி ணைந்த மாவட்ட டாஸ் மாக் பணியாளர்கள் சங்கங் களின் கூட்டு குழு சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் டி.தனசேகர், மாநில பொருளாளர் கோவிந்தராஜ் ஆகியோர் தலைமை தாங்கினார்.

இதில் எஸ்சி எஸ்டி நல சங்கம் மாநில பொதுச் செய லாளர் கே.அண்ணாதுரை, மாவட்டத் தலைவர் கே. வைகுந்தம், விற்பனையா ளர் நல சங்க மாநில பொதுச் செயலாளர் கே.குமார், மாநில பிரச்சார செய்தி தொடர்பாளர் ஏ.ஆதிகேச வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவள்ளூர் ரயில் நிலை யம் அருகில் பெரிய குப்பத் தில் நடைபெற்ற ஆர்ப்பாட் டத்தின் போது, டாஸ்மாக்கில் தனிநபர் ஒரு வருக்கு இரண்டு பாட்டி லுக்கு மேல் விற்பனை செய் தால் எஃப் ஐ ஆர், ஒரு ரூபாய் கூடுதலாக விட்டா லும் எஃப் ஐ ஆர் போடுவ தாக மிரட்டுவதை கைவிட வேண்டும். டாஸ்மாக் கடைகளில் அனைத்து செல வுகளையும் பணியாளர்கள் மீது சுமத்துவதை நிறுத்த வேண்டும் என்ற கோரிக் கைகளை வலியுறுத்தி முழக் கங்கள் எழுப்பினர்.

தற்போது த.வெ.க. ஆட்சி அமைந்ததும் த.வெ.க நிர்வாகிகள் என்ற பெயரில், சமூக ஆர்வலர் கள் என்ற பெயரில் டாஸ் மாக் மதுபானக் கடைகளை வீடியோ எடுப்பது, மிரட்டி பணம் பறிப்பது, அச்சுறுத்து வது போன்று அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்படுபவர் களை அரசு கண்டிக்க வேண்டும்.

மதுபானங்களின் விலையை எம்ஆர்பி விலைக்கே விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். காலி மது பாட் டில்களை வாங்க மாட் டோம். கடந்த ஆட்சி காலங்களில் டாஸ்மாக் கடைக்கான வாடகையில் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் வழங்குவதை மாற்றி உண்மையான வாட கையை அரசு வழங்க வேண்டும்.

அன்றாட நிர்வாக செல வினங்களை அரசே ஏற்க வேண்டும். உடையும் பாட் டிலுக்கு உண்டான பணத் திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். அதேபோல் மின் கட்டணத்தையும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங் குவதை தவிர்த்து அரசே முழுவதுமாக செலுத்த வேண்டும் என்றும் வலியு றுத்தினர்.

மேலும் 23 ஆண்டுகளாக வேலை செய்து வரும் தங்க ளுக்கு பணி நிரந்தரம், கால முறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைக ளையும் உடனடியாக புதி தாக பொறுப்பேற்று இருக் கும் அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தினர்.

அதே நேரத்தில் தற் போது மூடப்பட்ட கடைக ளில் பணிபுரிந்த ஊழியர்க ளுக்கு அரசு பணி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பல் வேறு சங்கங்களின் நிர்வாகி கள் வி.பி.முரளி, எஸ்.கண் ணன், ஜெயபிரகாஷ், ராஜேந்திரன், ஆர் ஏழு மலை, கே.ராமன், எஸ்.முரு கன், பால்ராஜ் உட்பட நூற் றுக்கும் மேற்பட்ட டாஸ்மாக் ஊழியர்கள் கலந்து கொண்டு கோரிக் கைகளை வலியுறுத்தி முழக் கங்களை எழுப்பினர்.

த.வெ.க. ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு

திருவள்ளூரில் கோயில் உண்டியலை உடைத்து திருட்டு!

காவல் நிலையம் அருகிலேயே சம்பவம்!

திருவள்ளூர், மே 24:

திருவள்ளூர் நகரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் அமைந் துள்ள பிரபல அம்மன் கோவிலில் பூட்டை உடைத்து நகை மற்றும் உண்டியல் பணம் கொள் ளையடிக்கப்பட்ட சம்ப வம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் நேதாஜி சாலையில் உள்ள ஸ்ரீ பிடாரி பொன்னியம் மன் ஆலயம் பக்தர்கள் அதிகம் தரிசிக்கும் பிர பல ஆலயமாகும். இந்த கோவில் திருவள்ளூர் டவுன் காவல் நி லை ய த் தி லி ரு ந் து சுமார் அரை கிலோமீட் டர் தொலைவில் அமைந் துள்ளது. ஆலய பூசாரி யாக என். ஆறுமுகம் பணியாற்றி வருகிறார்.

அதிகாலையிலேயே

ஆலயம் திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடை பெற்றன. பின்னர் வழக் கம்போல் இரவு பூஜை கள் முடிந்து கோவில் பூட்டப்பட்டு பூசாரி வீட்டிற்கு சென்றுள் ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை கோவிலை திறக்க சென்ற போது முன்பக்க பூட்டு உடைக் கப்பட்டிருந்ததை கண்டு பூசாரி அதிர்ச்சி அடைந் தார். இதுகுறித்து அறங் காவலர் குழுத் தலைவர் சீனிவாசனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து திருவள்ளூர் டவுன் போலீசாருக்கும் தகவல் அளிக்கப்பட்ட தையடுத்து காவல்துறை யினர் சம்பவ இடத் திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண் டனர்.

ஆய்வில், அம்மன் கழுத்தில் அணிவிக்கப் பட்டிருந்த சுமார் 2 கிராம் தங்க சங்கிலி மற் றும் உண்டியல் பணம் கொள்ளையடிக்கப்பட் டது தெரியவந்தது. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீ சார், சம்பவத்தில் ஈடு பட்ட மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

மாவட்ட தலைநகரின் மையப் பகுதியிலும், காவல் நிலையத்திற்கு அருகிலுமுள்ள கோவி லில் இந்த துணிகர கொள்ளை நடைபெற்றி ருப்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களி டையே அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

ஆர்.என்.துரை பங்கேற்பு!

119 அ வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் லைனர் கே.பிரபு அறிவிப்பு!

சென்னை, மே 24-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 {அ} வட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம் இன்று (24.05.2026 ஞாயிற்றுக்கி ழமை) மாலை 6.30 மணி அளவில் ராயப்பேட்டை நெடுஞ்சாலை வி.எம்.தெரு சந்திப்பில் ஸ்ரீபுரம் முதல் தெருவில் உள்ள சாகர் மஹால் என்கின்ற திருமண மண்டபத்தில் வட்ட கழக அவைத் தலைவர் சி.வாசன் தலைமையில் பகுதி செய லாளர் ஏ.ஆர்.பி.எம்.காம ராஜ் எம்.கி., மாவட்ட கழக உறுப்பினர் ஏ.பி.வேலு, பகுதி கழக திருவல்லிக்கேணி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அழகம்மாள் என்கின்ற சித்ரா, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வே.சௌந் தர்ராஜன் ஆகியோர் முன் னிலையில் வட்ட கழக செயலாளர் எனது லைனர் கே.பிரபு வரவேற்புரையில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப் படி, மறைந்தும், மறையா மல் நம் இதயத்தில் வாழ்ந் துக் கொண்டு இருக்கும், உயிரினும் மேலான முத்த மிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறும் ஆலோசணை கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆர். என்.துரை சிறப்புரை ஆற்று கிறார்.

இந்த நிகழ்ச்சியில் நம் வட்டத்தில் அடங்கிய மாவட்டம், பகுதி, வட்ட நிர்வாகிகள், மற்றும் பாகத் தலைவர்கள், பாக முகவர் கள், பாக உறுப்பினர்கள், அனைவரும் இந்த நிகழ்ச்சி கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் லைனர் கே.பிரபு தெரிவித்துள்ளார்.

ஆர்.டி.சேகர்–கலாநிதி வீராசாமி – தாயகம் கவி– முன்னணியினர் பங்கேற்பு

இராயபுரம் 51 வது வட்ட முன்னாள் செயலாளர் க.சேகரன் படம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்

சென்னை, மே.24

இராயபுரம் பகுதி-வட்ட முன்னாள் செய லாளர் நினைவில் வாழும் கே.கணேசன் அவர்க ளின் மகனும், இராயபு ரம் கிழக்குப் பகுதி 51 வது வட்ட முன்னாள் செயலாளர் க.சேகரன் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (24.5.2026-ஞாயிற்றுக்கி ழமை) மாலை 5 மணிக்கு சென்னை, பழைய வண் ணாரப்பேட்டை ஸ்ரீரங் கம்மாள் தெரு, ஜெபி கோவில் தெரு சந்திப்பில் நடைபெறுகின்றது.

நினைவில் வாழும் க.சேகரன் அவர்களின் திருவுருவப் படத்தை கழக அமைப்புச் செயலா

ளர் ஆர்.எஸ். பாரதி திறந்து வைத்து புகழ் அ ஞ் ச லி செ லு த் து கி றார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் மா வ ட் ட க் க ழ க ப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர், டாக்டர் கலா நிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி, மாஸ்டர் பெ.சேகர், டாக்டர் அ.சுபேர்கான், ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜெ.ஜெ.எபி னேசர், தா.இளைய அருணா, ந.மனோகரன், பி.டி.பாண்டிச் செல்வம், இரா. செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், மு.கோபி, க.நாகம்மை, வே. சிவக்கு மார், சு.சேகர், கி.இராஜேந்தி ரன், நா.சண் மு க ம் , த.ஜெயபால், பி. சே க ர் , கு. சு ந் த ர் , பி.ஜெயலட் சுமி, லோ.மோகன், கே. கோவிந்தராஜ், க.கலைச் செல்வன், காட்டன் ஜி. சதீஷ்குமார், ஆர்.வி. கணேஷ், என்.கிருஷ் ணன், பி.கண்ணன்,

எம். கே. இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி. ம லை ய ம் மா ள் , இ.மதன், இரா.பாலன், எம்.எல்.ரவி, கொரியர்பி. முருகன், எஸ்.புகழேந்தி, பாலா லட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன், வண்ணை இ.மூர்த்தி, ஐ.சி.எப். பழனி, பிரஸ் என்.பாரி, எஸ்.குமார், க.சுரேஷ், த.ரவி, எம்.எம்.சந்துரு, பி. சத்யநாராயணன், கோ.ஆறுமுகம், ஜி.உமா பதி, டி.கவியரசு, க.சசி, கே.குபோரன், டி.நந்தா, வி.சரவணன், பி.சம்பத் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சியை இரா.முரு கன், ஜி.பாபு, எஸ்.ஈஸ்வ ரன், எஸ்.மாரிமுத்து, பி. ஏழுமலை, ஆர்.ராஜ்கு மார், எம். சண்முகம், இ.கங்காதரன், சைக்கிள் எஸ்.கார்த்திக், எஸ். பார்த்தசாரதி, சு.பாஸ்கர், சு.பிரபு ஆகியோர் ஒருங் கிணைத்துள்ளனர்.

தஞ்சை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

ம.ரெங்கசாமி தாயார் மறைவு!

தஞ்சை, மே 24-

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றி யம், மலையர் நத்தம் மறைந்த கோ.மருதையா வன்னியர் மனைவியும், தஞ்சை முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ம.ரெங்க சாமி, ம.சம்பத் (எ) வெங்க டாசலம், ம.சுரேஷ் (எ) கோவிந்தசாமி இவர்களில் தாயாருமாகிய ம.ஜைய லெட்சுமி அம்மையார் அவர்கள் நேற்று (23.05.2026) காலை 10.00 மணியளவில் இயற்கை எய் தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தஞ்சாவூர் தளவாபாளை யம் ரோடு, வீரையா நகர் இல்லத்தில் உள்ள அம்மை யாரின் உடலுக்கு கழக நிர் வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இன்று (24.05.2026) மாலை 4.30 மணியளவில் வீரையா நகரில் இறுதிச்ச டங்கு நடத்தப்பட்டு அவ ரது சொந்த ஊரான மலை யர் நத்தம் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் பி.மகேந்திரன் இல்ல விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், 18வது வட்ட செயலாளர் சாலை டி.கணேசன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் மணலி எஸ்.ஸ்டாலின், 21வது வட்ட துணை செயலாளர் கலை கே.சரவணன், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆர்.எல்.பிரபு, ஜி.சுரேஷ், டி.சதீஷ், 18வது இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.நவீன்குமார், ஸ்ரீநாத், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ராஜேந்திரன், எஸ்.வினோத்குமார், நந்தகுமார், ஏ.கார்த்திகேயன், பி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.